இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 216 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 04 – புதன்கிழமை 18 மார்ச் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 216 : Thiruvalluvar Year - 2057 - Panguni 04 - Wednesday 18 March 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00





கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் தலைமையேற்று உரையாற்றினார். இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், பொருளாளர், டி.ஆர். பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என். நேரு, துணை பொதுச் செயலாளர்கள் அமைச்சர் இ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ., திருச்சி சிவா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., ஆ. ராசா எம்.பி., அந்தியூர் செல்வராஜ் எம்.பி., அமைச்சர் மு.பெ. சாமிநாதன், கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு, புதுச்சேரி சட்டமன்றத் தேர்தல்! கழக வேட்பாளர்களாகப் போட்டியிட

# விண்ணப்பித்தவர்களிடம் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் நேர்காணல்!

## புதுச்சேரி – காரைக்காலில் அடங்கிய தொகுதிகளில் விருப்ப மனு அளித்தவர்களிடம் மேற்கொண்டார்!

**சென்னை, மார்ச் 18-**

**தமிழ்நாடு, புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளர்களாகப் போட்டியிட விண்ணப்பித்தவர்களிடம் நேர்காணல் நேற்று (17.3.2026) தொடங்கியது.**

**நேற்றைய நேர்காணலில் புதுச்சேரி - காரைக்காலில் அடங்கிய தொகுதிகளில் விருப்ப மனு அளித்தவர்களிடம் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேர்காணல் மேற்கொண்டார். இன்றும் நேர்காணல் தொடர்கிறது.**

தமிழ்நாடு - புதுச்சேரி சட்டப் பேரவை பொதுத் தேர்தலுக்கு போட்டியிட விரும்பி தலைமைக் கழகத்திற்கு விண்ணப்பம் செலுத்தியவர்களை கழகத் தலைவர் அவர்கள் 17-03-2026 முதல் 22-03-2026ஆம் தேதி வரை, பின்வரும் மாவட்ட வாரியாக சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேர்காணல் வாயிலாக சந்தித்து தொகுதி நிலவரம் வெற்றி வாய்ப்புகள் குறித்து ஆராய்ந்து அறிந்திட இருக்கிறார்கள்.

குறிப்பிட்டுள்ள தேதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர் மட்டும் வரவேண்டும். மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, நகர, பகுதிக் கழகச் செயலாளர்கள் வரவேண்டிய அவசியமில்லை. வேட்பாளர்கள் தங்களுக்கான ஆதரவாளர்களையோ, பரிந்துரையாளர்களையோ அழைத்து வரக்கூடாது என்றும், அவர்களையும் ‘அவர்களுக்காக விருப்ப மனு’ செலுத்தியோரையும் நேர்காணலுக்கு கண்டிப்பாக அனுமதிக்க இயலாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**அதன்படி நேற்று (மார்ச் 17 செவ்வாய்) காலை 9.00 மணி - புதுச்சேரி மற்றும் காரைக்காலில் அடங்கிய தொகுதிகளில் விருப்ப மனு அளித்தவர்களிடம் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேர்காணல் மேற்கொண்டார்.**

மேலும் நேர்காணல் நடைபெறும் விவரங்கள் வருமாறு:-

### மார்ச் - 18

**இன்று (மார்ச் 18 புதன்) காலை 9.00 மணி - தூத்துக்குடி தெற்கு, தூத்துக்குடி வடக்கு, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, திருநெல்வேலி மேற்கு, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு,**

**மாலை 4.00 மணி - மதுரை வடக்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு, தேனி வடக்கு, தேனி தெற்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, இராமநாதபுரம், சிவகங்கை**

### மார்ச் - 19

**மார்ச் 19 வியாழன் - காலை 9.00 மணி - கரூர், நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, ஈரோடு மத்திய, கோவை வடக்கு, கோவை மாநகர், கோவை தெற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் மத்திய, நீலகிரி,**

**மாலை 4.00 மணி - கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, திருப்பூர் கிழக்கு, திருப்பூர் தெற்கு, திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு,**

### மார்ச் - 20

**மார்ச் 20 வெள்ளி - காலை 9.00 மணி - இராணிப்பேட்டை, வேலூர் வடக்கு, வேலூர் தெற்கு, திருப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு,**

**மாலை 4.00 மணி - தர்மபுரி கிழக்கு, தர்மபுரி மேற்கு, சேலம் மத்திய, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு,**

### மார்ச் - 21

**மார்ச் 21 சனி - காலை 9.00 மணி - திருச்சி வடக்கு, திருச்சி மத்திய, திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, பெரம்பலூர், அரியலூர்,**

**மாலை 4.00 மணி - புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, கடலூர் மேற்கு, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர்,**

### மார்ச் - 22

**மார்ச் 22 ஞாயிறு - காலை 9.00 மணி - கடலூர் கிழக்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் மத்திய, விழுப்புரம் தெற்கு, காஞ்சிபுரம் தெற்கு,**

**மாலை 4.00 மணி - திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, சென்னை மேற்கு, சென்னை கிழக்கு.**

- ஆகிய மாவட்டங்கள் வாரியாக நேர்காணல் நடைபெறுகிறது என்று கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் அறிவித்துள்ளார்.



**வரும் தேர்தல் தமிழ்நாடு அணிக்கும், டெல்லி அணிக்கும் இடையேதான் போட்டி!**

